

# வானவில் அணிவகுப்பு

STEM-KALVI CHARITY

3.3

## பூங்கோதை

நீதிக்கதை

STEM-Kalvi Charity



ஒரு அழகான நதி ஓரமாக ஒரு சிறிய மலை இருந்தது. அங்கு மூன்று விலங்குகள் தோழமையுடன் இருந்தன.



முதலாவது தோழன்  குரங்கு சீனு.
இரண்டாவது தோழி  வரிக்குதிரை தீபா.
மூன்றாவது தோழி யானை கயல்.
அவைகள்  ஒவ்வொரு நாளும் ஒன்றாகச்
சேர்ந்து  விளையாடுவது வழக்கம்.



ஒரு நாள் காலையில் ஏதோ சரியாக இல்லை என்பதை அவை உணர்ந்தன. சீனுவும், தீபாவும், கயலும் அது என்னவாக இருக்கும் என யோசித்தன.



தோழர்களான முள்ளம்பன்றி முரளி,
காட்டுமுயல் வேணி இருவரையும்
அன்று காணவில்லை. அது ஏன் என
யோசித்து, அது பற்றி விசாரித்தன.



முரளியும் வேணியும் வித்தியாசமான நிறங்கள் கொண்டவை. அதன் காரணமாக ஏனைய தோழர்கள் முரளியோடும் வேணியோடும் சேர்ந்து விளையாடாமல் தள்ளி வைத்தன. அதை இந்த மூன்று தோழர்களும் உணர்ந்தன.



இது அவைக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. மூன்று நண்பர்களும் இதைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தன.

"இது எங்கள் மூவருக்கும் மிக மன வருத்தத்தை அல்லவா தருகிறது?" தீபா சொல்லியது.



"நாம் மூன்று பேரும் இணைந்து ஒரு அணிவகுப்பை நடத்துவோமா?" சீனு கேட்டது.



"அதற்கு 'வானவில் அணிவகுப்பு' எனப் பெயர் இடலாம்." தீபா கூறியது.
சீனுவும் கயலும் அந்த அணிவகுப்பிற்குத் தேவையான விடயங்களை ஒழுங்கு செய்தன.



“யார் எந்த நிறமாக இருந்தாலும் உங்களின் தனித்தன்மை என்பது அற்புதமான ஒரு விடயம்.” கயல் அந்த அணிவகுப்பில் உரத்துச் சொல்லியது.



அவர்கள் மலை வழியாக அணி வகுத்துச் சென்றனர். சீனுவும், தீபாவும், கயலும் ஒவ்வொருவரும் வித்தியாசமாக இருப்பதுதான் ஒவ்வொருவருக்கும் சிறப்பு என்று விளக்கின.



அவைகள் கதைகளைப் பகிர்ந்து
கொண்டன. ஒற்றுமையாக நடனமாடின.
பாடல்களைச் சேர்ந்து பாடின.



அணிவகுப்பின் முடிவில் மலை முழுவதும்  சிரிப்பு, அன்பு, புரிதல் ஆகியவற்றால் நிரம்பியிருந்தது. அதனால் மலை மிக அழகாகக் காட்சி அளித்தது.



அன்று முதல், அந்த மலையில் விலங்குகள் தங்கள் தனித் தன்மையைக் கொண்டாடின. நிறம், இனம் என்று பிரித்துப் பார்க்காமல் அனைத்தும் அன்பாகப் பழகின.



சிறிய செயல்கள் கூட உலகில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்து கொண்டன. அன்று தொடக்கம் அந்த மலையில் வாழும் அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தன.

முற்றும்.

**Publisher:** STEM-Kalvi Charity

**Email**: STEMkalvi@gmail.com

**Web:** WWW.STEMkalvi.org

**Writer :** Poonkothai, UK

**Book: Vanavil Anivakuppu**
**(வானவில் அணிவகுப்பு)**

**Language: Tamil**

**Reading Level**: 3.3

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the **'1000 Reading Books'** initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022



**About the writer :** Poonkothai migrated from Sri Lanka to the UK in 1989. After completing her graduation and post-graduation in science and education, she entered the educational field. She has been teaching as a qualified full-time English teacher at Government Schools in the UK for several years. Poonkothai published a Health Promotion book in 2004 and a collection of short stories in 2022, dedicating her Tamil skills to her late mother, a Tamil teacher, Puvaneswary.

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics